1973 நவம்பர் 26]

திருமதி த. ந. அனந்தநாயகி : விசைத் தெளிப்பான்களை எல்லாம் எந்தக் கம்பெனியிடமிருந்து வாங்குகிறது என்பதை அரசு தெரிவிக்குமா? வாங்கும்போது டெண்டர் கேட்டு, கொட்டேஷன்ஸ் கேட்டு வாங்கினர்களா? அல்லது மொத்தமாக வாங்கி விட்டார்களா? அரசாங்கத்திலே சப்ளைஸ் அண்ட் டிஸ்போசல்ஸ் டிபார்ட்மெண்ட் இருக்கிறது. அந்த மாதிரி டிபார்ட்மெண்ட் மூலமாக வாங்க முயற்சி எடுத்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஏற்கனவே, டெண்டர் கோரப்பட்டு வாங்கப்பட்டிருக்கிறது. அந்த இயந்திரங்கள் தரமானவையா என்பதை ஆராய ஒரு குழு இருக்கிறது. அதனுடைய பரிசிலனைக்குப் பிறகுதான் இவை வாங்கப்படுகின்றன. எந்த எந்த கம்பெனி என்பதைப்பற்றி இப்பொழுது என்னிடத்திலே தகவல் இல்லை.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, விசைத் தெளிப்பான் பழுதுபட்டுப் போவதைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சில ஊராட்சி ஒன்றியங்களில் ஆயில் இன்ஜின்களையும் வாங்கி வைத்திருக்கிறோம். ஜீப் இருக்கிறது சில ஊராட்சி ஒன்றியங்களிடம். ஆகவே, அவைகளை எல்லாம் பழுதுபார்ப்பதற்கு மெக்கானிக்கை ஒவ்வொரு யூனியனிலும் வைக்க அரசு முயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இதுவரையிலே அப்படிப்பட்ட ஆலோசனை எதுவும் இல்லை.

கெங்குரெட்டி ரோடில் இருப்புப்பாதை கடவு

*** 409 வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடை பளிப்பாரா—

சென்னை, எழும்பூர் கெங்குரெட்டி ரோடு இரயில்வே லெவல் கிராசிங்கில் மேம்பாலம் கட்டுவதற்கான திட்டம் அரசு பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, இப்படி ஒரு யோசனை நீண்ட காலமாக சென்னை மாநகராட்சிக்கு இருப்பதும், சென்னை மாநகராட்சி செய்ய வேண்டுமென்று மத்திய அரசினுடைய ரெயில்வே துறையை வற்புறுத்துவதும் அங்கே குடிசைப் பகுதிகள் இருக்கிற காரணத்தினாலே அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அப்படிப்பட்ட ரயில்வே பாலம் வேண்டாமென்று அரசுக்கு எழுதி இருப்பதும் உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி மன்றம் முதலில் கெங்குரெட்டி சாலை இருப்புப் பாதைக் கடவுக்கு அருகில் பூந்தமல்லி நெடுஞ் சாலையையும் கிழக்கு ஸ்பர்ட்டாங்க் சாலையையும் இணைக்கும் பாலமொன்றைக் கட்ட எண்ணியது. ஆனால், அத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் உள்ள தொழில் நுணுக்கச் சிக்கல்களால் அது கைவிடப்பட்டது. இப்போது அவ்விடத்தில் ரூ. 25.00 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் ஒரு சுரங்கப் பாதை அமைப்பதென்று எண்ணி, அந்த வேலைக்கு பாதி கடனாகவும், பாதி மானியமாகவும் கொடுக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

திட்டமிடப்பட்டுள்ள அந்தச் சுரங்கப்பாதை 77 அடி அகலமாகவும் வண்டிகள் செல்ல 48 அடி இடமுள்ளதாகவும் நடுவில் 2 அடியும் இரு பக்கங்களில் சைக்கிள்கள் செல்வதற்காக 6 அடி இடமுள்ளதாகவும் கைப்பிடிச் சுவர்களுடனும் அமையும்.

அச்சுரங்கப்பாதை கட்டத் தேவையான நிலத்தில் வசித்த அனுமதி பெறாத குடிசைவாசிகள் குடிசை மாற்று வாரியத்தால் வெளியேற்றப்பட்டு விட்டதாக சென்னை மாநகராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இப்படி சென்னை நகரத்திலே பல இடங்களிலே ரயில் பாதையும், சாதாரண பாதையும் மோத வேண்டிய சூழ்நிலையிலே இருக்கிறது. ஹாரிங்டன் ரோடிலே இருக்கிறது, கெங்குரெட்டி தெருவிலே இருக்கிறது, இம்மாதிரி நிலை. எப்பொழுதோ அங்கு கட்ட வேண்டுமென்று சொல்லப் பட்டாலும் காலதாமதம் ஆகிக் கொண்டே இருக்கிறது. அதை இனிமேலாவது துரிதமாகச் செய்ய அரசு முன்வருமா? மாநகராட்சிதான் கலைக்கப்பட்டு விட்டதே, இன்னமும்

மாநகராட்சி என்று சொல்லிக் கொண்டிராமல், அரசாங்கமே நேரடியாக அதை எடுத்துச் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்குமா, அந்த முடிவை அரசு தெரிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நீண்ட நெடுங்காலமாக இப்பொழுது வரும், பிறகு வரும் என்ற நிலைமையை மாற்றி செய்யப்பட வேண்டியவற்றை, உடனடியாகச் செய்வதற்கு இந்த அரசு முடிவெடுத்து, உடனடியாகச் செய்ய வேண்டியவற்றை இப்பொழுது செய்து வருகிறது. மேலும் எது எது அவசியம் என்று கருதுகிறதோ அதை இப்பொழுதே செயலாற்றி விடலாம் என்ற நிலைமையிலே அரசு நடவடிக்கை எடுக்கும் முறையைக் கடைப்பிடித்து வருகிறது ?

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் ஒரு மைலுக்கு உள்ளாகவே இரண்டு மேம் பாலங்கள் இருக்கின்றன. அந்தக் காரணத்தினாலே, கெங்கு ரெட்டி சாலையிலே அமைக்கப்பட இருக்கிற சுரங்கப் பாதையை குறித்து, அத் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகிய என்னுடைய கருத்து, தேவையில்லையென்பது. அந்தக் கருத்தை இப்பொழுதாவது அரசு புனர் ஆலோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படி ஒன்றும் இப்பொழுது இல்லை.

THIRU K. M. SUBRAMANIAM : Although the Kannammapet sub-way was sanctioned in 1964 and money allotted from that date, is it nearing completion or is it going to be completed soon. What is the position now?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கட்டி முடிக்கப்பட்டு விட்டது. விரைவிலே அங்கத்தினர் அவர்களுக்கு சொல்லி திறக்கப்படும்.

Kannappar Thidal in Madras

* 410 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Madras Corporation to hand over the Kannappar Thidal to Railways for consideration; and

(*b*) if so, the details thereof ?